பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

15 02 2025 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி பிரான்ஸ் மற்றும் அமெரிக்க அரசுமுறைப் பயணத்தை முடித்துக்கொண்டு புதுதில்லி திரும்பினார்.

2. ஒரே பாரம் - உன்னத பாரதம் என்ற உயரிய கருப்பொருளோடு காசி தமிழ் சங்கமம் இன்று தொடங்குவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

3. சிபிஎஸ்இ பத்து மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் இன்று தொடங்கின.

4. உலக அளவில் 50 கோடிக்கும் மேற்பட்டோர் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற சாதனையை மகா கும்பமேளா படைத்துள்ளது.

5. அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Gulveer Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி பிரான்ஸ் மற்றும் அமெரிக்க பயணத்தை முடித்துக்கொண்டு புதுதில்லி திரும்பினார்.

இந்த பயணத்தின்போது, அந்நாட்டு தலைவர்களுடன் பிரதமர் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக மத்திய அரசு கூறியுள்ளது.

அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்புடன், திரு நரேந்திர மோடி நான்கு மணிநேரத்திற்கும் மேலாக பேச்சு நடத்தியதாக வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பாதுகாப்பு, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த பேச்சுக்களின்போது விவாதிக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை இரு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரிப்பது என்றும் இந்த பேச்சுக்களின்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், பிரான்ஸ் அதிபருடன் நடத்திய பேச்சுக்களின்போது, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

காசி தமிழ் சங்கமம் இன்று வாரணாசியில் தொடங்குகிறது.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைசமச்ர் திரு எல். முருகன் ஆகியோர் கூட்டாக இதனை தொடங்கிவைக்கின்றனர்.

நூற்றாண்டு பழமையான தொடர்புகளின் கொண்டாட்டமாக நடைபெறவுள்ள காசி தமிழ் சங்கமம், வாழ்நாள் முழுவதும் போற்றப்படத்தக்க வகையில் இருக்கும் என்று திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், வேற்றுமையில் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக இந்த நிகழ்ச்சி திகழ்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற உயரிய கருப்பொருளோடு இந்த நிகழ்ச்சி நடைபெறவுள்ளதாக திரு எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மூன்றாவது முறையாக நடைபெறும் இந்த காசி தமிழ் சங்கமம் தமிழகத்திற்கும், காசிக்கும் இடையிலான கலாச்சார ஒற்றுமையை வலுப்படுத்தும் என்று நம்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

பல நூற்றாண்டுகால கலாச்சார உறவினை மேம்படுத்தும் நோக்கில், வேற்றுமையில் ஒற்றுமை என்ற நமது ஜனநாயகத்தின் அடிப்படை கூற்றோடு இப்பெருவிழா நடைபெறவுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியை நடத்துவதற்கு வழிவகுத்து அதற்கான வாழ்த்து செய்தி அளித்துள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு தமிழக மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியையும் அவர் பகிர்ந்துள்ளார்.

<<<<<<>>>>>

சிபிஎஸ்இ பத்து மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் இன்று தொடங்கின.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் அடுத்த மாதம் 18-ஆம் தேதிவரையும், 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் ஏப்ரல் மாதம் 4-ஆம் தேதிவரையும் நடைபெறவுள்ளன.

பொதுத்தேர்வு தொடர்பாக மாணவர்களிடையே அச்சகத்தை களையும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களுடன் கலந்துரையாடியது பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த நிகழ்ச்சி தங்களுக்கு உத்வேகம் அளித்துள்ளதாக இதில் பங்கேற்ற கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த **Domnic Jeffrey-** எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - **Domnic Jeffrey** – 54 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

பிஜேபி பொதுச்செயலாளர்கள் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா தலைமையில் இந்த கூட்டம் நடைபெறவுளளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவான மகா கும்பமேளா, வரலாற்று சாதனையை படைத்துள்ளது.

இதில் 50 கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியதன் மூலம், இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

50 கோடிக்கும் மேற்பட்டோர் ஒரு நிகழ்வில் பங்கேற்பது உலக அளவில இதுவே முதல் முறை என்றும் அவர் கூறுகிறார்.

நேற்று மட்டும் 90 லட்சத்திற்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளனர்.

அமெரிக்கா, ரஷ்யா, இந்தோனேஷியா, பிரேசில், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று புனித நீராடியுள்ளனர்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

<<<<<<>>>>>

புதிய வருமானவரி சட்ட மசோதாவை ஆய்வு செய்வதற்காக 31 பேர் கொண்ட தெரிவுக்குழுவை மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா ஏற்படுத்தியுள்ளார்.

பிஜேபி உறுப்பினர் திரு **'Baijayant Panda** தலைமையிலான இந்தக்குழு அடுத்தக்கூட்டத்தொடரின் முதல்நாளில் தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

பிஎஸ்என்எல் நிறுவனம் நடப்பு நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் 262 கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளதாக தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பொதுத்துறை நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு கிடைத்த வெற்றி இது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 19 பேர் காயமடைந்தனர்.

பிரயாக்ராஜ் மாவட்டம் அருகே தனியார் பேருந்தும், காரும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத்தும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு உயரிய சிகிச்சை வழங்குமாறும் அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் ஹரியானா அரசு வழங்கும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு **Nayab Singh Saini** கூறியுள்ளார்.

சண்டிகரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நோய் பாதிப்பை ஆரம்பக்கட்டத்திலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை மேற்கொள்வதன் மூலம், புற்றுநோயை வெல்லலாம் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தில்லி முன்னாள் முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு எதிரான முறைகேடு புகார்கள் குறித்து விசாரிக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

அரசு சார்பில் தில்லி முதலமைச்சருக்கு வழங்கப்பட்ட இல்லத்தை புதுப்பிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளின்போது முறைகேடுகள் நடைபெற்றதாக பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய ஊழல் தடுப்பு கண்காணிப்பு ஆணையம் இதற்கான உத்தரவினை பிறப்பித்துள்ளது.

<<<<<<>>>>>

ஒடிஷா சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக பிற்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்று காலை அவை கூடியதும் பிஜு ஜனதாதள் மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினை குறித்து விவாதிக்க வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அவை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

<<<<<<>>>>>

வடகிழக்கு மாநிலங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மேற்குவங்கம், சிக்கிம் மாநிலங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டம் நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இமாச்சலப்பிரதேசத்தில் கடும் குளிர் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>**

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Gulveer Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

பாஸ்டனில் நடைபெற்ற இப்போட்டியின், ஆடவர் 3 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**<<<<<<>>>>>**

புரோ லீக் ஹாக்கிப்போட்டி புவனேஷ்வரில் இன்று தொடங்குகிறது.

இந்தியா மகளிர் பிரிவில் இங்கிலாந்தையும், ஆடவர் பிரிவில் ஸ்பெயினையும் எதிர்கொள்கின்றன.

**<<<<<<>>>>>**

ஹாங்காங்கில் நடைபெற்று வரும் ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா ஆடவர் பிரிவில் மலேசியாவையும், மகளிர் பிரிவில் ஹாங்காங்கையும் இன்று எதிர்கொள்கிறது.

**<<<<<<>>>>>**

ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில், இந்தியாவின் குகேஷ் எட்டாவது இடத்தை பிடித்தார்.

**<<<<<<>>>>>**